திரு. செ. கந்தப்பன் : குடிசை மாற்று வாரியத்தினால் அமைக்கப்படுகின்ற நல்ல வீடுகள் குறைந்த வாடகையில் விடப்படுவதாக அறிகின்றோம். இந்த வகையில் நம்முடைய மாநில அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது? எதிர்காலத்தில் இந்தத் திட்டம் விரிவாக்கப்படும்போது இந்த இழப்பு பெருமளவுக்கு உயரக்கூடுமா? அப்படியானால் இந்த இழப்பை ஈடுசெய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தண்ணீர்க் குழாய்கள் வசதி, விளக்கு வசதி ஆகியவற்றுடன் தரப்படுகிற வீடுகளுக்குக் குறைந்தபட்சம் 50 ரூபாய் வாடகை வசூலிக்கப்பட வேண்டும். ஆனால், இப்பொழுது அங்கே குடியிருக்கின்ற ஏழை எளிய மக்களிடமிருந்து 15 ரூபாய்தான் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, 35 ரூபாய் ஒவ்வொரு குடியிருப்புக்கும் அரசாங்கம் மானியமாகத் தரவேண்டிய சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. கால கட்டத்தில் இந்த நஷ்டம் அதிகமாகத்தான் ஆகும். அதற்காகத்தான் ஆங்காங்கு கட்டுகிற குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே வருமானத்தைப் பெருக்கும் வகையில் கடைகளும் சிற்றுண்டி விடுதிகளும் கட்டலாமா என்ற யோசனை குடிசை மாற்று வாரியத்திற்கு இருக்கிறது. அந்த யோசனை சில இடங்களில் செயல்படவும் தொடங்கி இருக்கிறது.

* 178 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of slum dwellers were evicted near Muthuswamy Iyer Bridge in George Town area in Madras about November 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சென்னை 40-வது வட்டத்தில் முத்துசாமி ஐயர் பாலத்திற்கும் அரசாங்க பொது மருத்துவமனைக்கும் இடையே அமைந்துள்ள இடம் அன்பழகன் நகர், ஜோதி அம்மாள் நகர் என்று வழங்கப்படுகிறது. சுகாதாரக் கேடுடன் அமைந்த இவ்விடம் மக்கள் வாழ வசதியற்றதாக உள்ளது. இங்கு வசித்த குடிசை வாழ் மக்கள் யாவரும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் செலவில் வியாசர்பாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மாற்று இடம் கொடுக்கப்பட்டனர். ஒவ்வொரு

1972 ஆகஸ்ட் 19]

குடும்பத்திற்கும் தனித்தனியே இடமும் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக்கொள்ள ரூ. 50-ம் மானியமாக குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கொடுக்கப்பட்டது. தற்போது வியாசார்பாடியில் கட்டப்பட்டுவரும் மாடி குடியிருப்புகளின் வேலை முடிவுற்றதும் அம்மக்களை அவைகளில் குடியேற்ற தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் உத்தேசித்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : குடிசைவாழ் மக்கள் இருந்துவந்த குடியிருப்புகளுக்குப் பக்கத்திலேயே அவர்களுக்கு மாற்றுக் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பக்கத்திலேயே இடம் இல்லாத காரணத்தால், அவர்களோடு கலந்துபேசி வியாசர்பாடியில் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கும் ஒவ்வொருவருக்கும் ஐம்பது ரூபாய் விதம் கொடுக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் இடம் மாறிக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : உப தலைவர் அவர்களே, சுகாதார அமைச்சர் மதிப்பிற்குரிய கனம் திரு. அன்பழகன் அவர்கள் பெயரில் இருக்கின்ற நகர் வாசிகளும், ஜோதி அம்மாள் பெயரில் இருக்கின்ற நகர்வாசிகளும் எங்கே மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதில் அன்பழகனோ ஜோதி அம்மாளோ மாறவில்லை. அங்கே வாழ்ந்த 232 குடும்பங்கள் தான் அங்கிருந்து வியாசர்பாடிக்கு மாற்றப்பட்டனர்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : உப தலைவர் அவர்களே, ஜோதி அம்மாள் நகரில் வாழ்ந்து வந்தவர்கள் இப்பொழுது சுடுகாட்டில் இருக்கின்றார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படியானால், அவர்களுக்கு எப்பொழுது இந்த ஸ்லம் க்ளியரன்ஸ் போர்டு மூலமோ. ஹௌஸிங் போர்டு மூலமோ வீடு கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வியிலே குறிப்பிட்டிருக்கிற இடம், முத்துசாமி ஐயர் பாலத்திற்கும் அரசாங்கப் பொது மருத்துவமனைக்கும் இடையே அமைந்துள்ள இடம் ஆகும். பக்கத்திலே இரயில்வே லைன் இருப்பதால் பல நேரங்களில் விபத்து ஏற்படுவதற்கு ஏதுவாக இருந்தது. அந்தப் பக்கத்திலே மோட்டார்

வண்டி உருண்டு குடிசையின்மீது விழுந்த காரணத்தால் குடிசையிலிருந்த இரண்டு பேர் இறந்துபோகக்கூட நேர்ந்தது. இந்தக் காரணங்களையெல்லாம் முன்னிட்டுதான் அங்கிருந்தவர்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டனர்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஜோதி அம்மாள் என்கின்ற பெயரில் எழும்பூர் தொகுதியில் சேத்துப்பட்டில் இருந்த அந்த நகர் இரயில்வே லைனுக்குப் பக்கத்தில் இருந்த காரணத்தால், இரயில்வே நிர்வாகிகள் அவர்களை வெளியேற்றிய காரணத்தால் அவர்களுக்கு மாற்று இடம் தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? அவர்களுக்கு நல்ல வீடுகள் அண்ணா நகரில் கட்டப்பட்டு குடியமர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முற்றிலும் உண்மை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : உப தலைவர் அவர்களே. சேத்துப்பட்டிலுள்ள அந்த இடம் கனம் அரங்கண்ணல் அவர்களுடைய தொகுதி இப்பொழுது. அந்தத் தொகுதியில் ஜோதி அம்மாள் நகர் மக்கள் வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள் என்று கனம் முதலமைச்சரவர்கள் சொன்னதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், சுடுகாட்டில் அந்த மக்கள் அனுப்பப்பட்டார்கள் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். அங்கிருந்து அவர்களை மாற்றி நல்ல வீட்டு வசதி அவர்களுக்குச் செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெயர் எதுவும் மாற்றப்படவில்லை. அம்மையார் கவலைப்பட வேண்டாம். இடுகாட்டின் பக்கத்தில் இருக்கின்றவர்களுக்கு விரைவில் வேறு இடங்கள் ஒதுக்கப்படும்.

திரு ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, புதியதாக அந்த மக்களுக்கு வீட்டு வசதி அமைத்துக்கொடுக்கப்பட்டிருக்கிற இடங்களுக்கு அன்பழகன் நகர், ஜோதி அம்மாள் நகர் என்று பெயர் வைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த நகரங்களுக்குப் பெயர் வைப்பதில் நாங்கள் கட்சி வேறுபாடு எதுவும் பார்ப்பதில்லை. புதிய அரசு வந்த பிறகு பெருந்தன்மையோடு நடந்துகொண்டிருக்கிறது.